செ.வெ.எண்: 450/2020 நாள்: 29.06.2020

# கல்குளம் வட்டத்தில் வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டாட்சியர் அலுவலகத்தில் வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (29.06.2020) நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம், திருவட்டார், விளவங்கோடு, கிள்ளியூர் ஆகிய வட்டங்களுக்கு 1429-ம் பசலிக்கான வருவாய் தீர்வாயத்துக்கு, கிராம கணக்குகளை சரிபார்க்கும் வருவாய் தீர்வாய கணக்கு சரிபார்த்தல் நிகழ்ச்சியானது இந்த வருடம் ஜூன் மாதம் 29-ஆம் தேதி முதல் ஜூன் மாதம் 30-ம் தேதி வரை நடைபெறுகிறது.

மேலும், கிராம கணக்குகளை சரிபார்க்கும் வருவாய் தீர்வாய (ஜமாபந்தி) கணக்கு சரிபார்த்தல் நிகழ்ச்சியானது, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கல்குளம் வட்டத்திலும், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரேவதி அவர்கள் தலைமையில், கிள்ளியூர் வட்டத்திலும், சார் ஆட்சியர் (பத்மநாபபுரம்) திருமதி.ஷரண்யா அறி, இ.ஆப.,, அவர்கள் தலைமையில், திருவட்டார் வட்டத்திலும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.த.மாதவன் அவர்கள் தலைமையில், விளவங்கோடு வட்டத்திலும், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மு.சிவகுமார் அவர்கள் தலைமையில், அகஸ்தீஸ்வரம் வட்டத்திலும், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.அ.மயில் அவர்கள் தலைமையில், தோவாளை வட்டத்திலும் ஜூன் மாதம் 29-ஆம் தேதி முதல் ஜூன் மாதம் 30-ம் தேதி வரை நடைபெற்றது.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.